இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

உங்கள் கை உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி விடுங்கள். நீங்கள் இரு கையுடையவராய் அணையாத நெருப்புள்ள நரகத்துக்குத் தள்ளப்படுவதை விட, கை ஊனமுற்றவராய் நிலைவாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது. உங்கள் கால் உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டிவிடுங்கள். நீங்கள் இரு காலுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட கால் ஊனமுற்றவராய் வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது. (மாற்கு 9:43-45)

# ஆசியா, ஓசியானியாவிற்கான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பயண நிகழ்வுகளின் விளைவு

ஆசியா மற்றும் ஓசியானியாவிற்கான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மிக நீண்ட திருத்தூதுப்பயணமானது மனதிலும் நினைவிலும் நிலைத்திருக்கக்கூடியது என்றும், உலகத்தின் முனைகளில் இருக்கும் மறைப்பணியாளர்களைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சந்தித்த மறக்க முடியாத பயணமாக இருக்கின்றது என்றும் கூறியுள்ளார் முனைவர் அந்திரேயா தொர்னியெல்லி.

**முதலாவது.**

ஜகார்த்தாவில் Istiqlal மசூதி மற்றும் அன்னை மரியா பேராலயத்தைச் சென்றடைய அமைக்கப்பட்டிருக்கும் அடிநிலப் பாதையான, "நட்புறவின் சுரங்கப்பாதை" திறந்து வைக்கப்பட்ட நிகழ்வு. போர், வன்முறை, தீவிரவாதம், இறப்பு, போன்றவை நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் நம்பிக்கையின் விதையாக இந்நிகழ்வு சான்றளிக்கின்றது. உரோம் ஆயர், மற்றும் இமாம் இடையிலான நட்புறவு மற்றும் அன்புறவின் வெளிப்பாடுகள் பலரது உள்ளத்தை தொட்டன.

**இரண்டாவது.**

பாப்புவா நியு கினியின் வடமேற்குப் பகுதியில் உள்ள வனிமோவிற்கு ஆஸ்திரேலிய இராணுவ விமானத்தில் உதவிப் பொருள்களுடன் பயணித்து அர்ஜெண்டினா மறைப்பணியாளர்களையும் அங்குள்ள மக்களையும் சந்தித்தது. மறைப்பணியாளர் என்பது வாழ்க்கையை, பிரச்சனைகளை, நம்பிக்கையைப் பகிர்வது. கடவுளின் மென்மை மற்றும் இரக்கத்திற்கு சான்று பகரும் அடையாளமாக இருப்பது.

**மூன்றாவது.**

கிழக்கு திமோரில் உள்ள திலியில் அரசுத்தலைவர் ஜோச் மானுவம் உடனான சந்திப்பின் போது திருத்தந்தையின் சக்கர நாற்காலியின் கீழ்ப்பகுதியை அரசுத்தலைவர் கீழே குனிந்து சரிசெய்தது. அதிகமான கத்தோலிக்கர்களைக் கொண்ட மக்கள் வாழும் நாட்டில், நம்பிக்கை என்பது



இந்தோனேசியாவில் அடைக்கலம் புகுந்துள்ள தமிழ் குடும்பத்தை ஆசீர்வதிக்கும் திருத்தந்தை

அடிப்படையான அடையாளமாகவும், திருஅவையின் பங்கு இந்தோனேசியாவின் வளர்ச்சிக்கான சுதந்திர செயல்பாடுகளில் வெளிப்படுகின்றது என்பதை எடுத்துரைக்கின்றது

**நான்காவது.**

அருள்சகோதரிகளால் நடத்தப்படும் இர்மாஸ் அல்மா பள்ளியில் உள்ள மாற்றுத்திறனாளர் குழந்தைகளை திருத்தந்தை அவர்கள் சந்தித்தபோது வெளிப்படுத்திய செய்கைகள் மற்றும் வார்த்தைகள். கடவுளே நம்மை காத்துக்கொள்ளட்டும் என்ற நற்செய்தி வார்த்தைகளை ஆழமாக எடுத்துரைத்தது. நாங்கள் ஏன் துன்புறுகின்றோம் என்ற குழந்தைகளின் கேள்வி ஆறாத காயமாக இருந்தாலும் தனது அரவணைப்பு மற்றும் நெருக்கத்தால் அவர்களுக்கு திருத்தந்தை பதிலளித்ததும் மறக்க முடியாதது.

**ஐந்தாவது.**

கிழக்கு திமோரில் நடைபெற்ற திருப்பலியின்போது 6 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் திருத்தந்தையின் வருகைக்காக பல மணி நேரங்கள் கடுமையான வெயிலில் காத்திருந்தனர். மொத்த மக்கள்தொகையில் அறுபத்தைந்து விழுக்காடு பேர் 30 வயதுக்குட்பட்ட மக்கள். திருத்தந்தையின் வாகனம் பயணித்த தெருக்கள் மற்றும் சாலைகளில் ஆண், பெண், இளையோர், குழந்தைகள் என காத்திருந்தது திருஅவை மற்றும் உலகிற்கான நம்பிக்கையாக காட்சியளித்தது.

**ஆறாவது**

மிக நவீன வானளாவிய கட்டிடங்கள் கொண்ட தீவு-மாநிலமான சிங்கப்பூர். வளர்ந்த மற்றும் பணக்கார நாடானது இதற்கு முன் சந்தித்த தூசி நிறைந்த திலி நகரத்தை முற்றிலும் வேறுபடுத்தியது. நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும், செழிப்பு, ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்க்கை, மிக வேகமான போக்குவரத்து போன்றவற்றைக் கொண்ட மக்கள் அனைவரையும் அரவணைத்து அன்பு, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தின் வழியை திருத்தந்தை இங்கு வெளிப்படுத்தினார்.

**இறுதியாக,**

மிக நீண்ட இந்த திருத்தூதுப்பயணத்தை மேற்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ். ஏறக்குறைய 88 வயதை நெருங்கி கொண்டிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த நீண்ட பயணத்தை எப்படி தாங்கிக்கொள்ளப் போகிறார் என்ற சந்தேகம் தொடக்கத்தில் இருந்தாலும் சோர்வடைவதற்கு பதிலாக மிகுந்த ஆற்றலைப் பெற்றார். அவர் மிகுந்த ஆற்றலைப் பெற்றவராக இந்த திருத்தூதுப்பயணத்தில் இருந்தார் என்பதற்கு சான்று, ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உரைகளை விட்டுவிட்டு தானாக அவர்களுக்கு உரை வழங்கியது.

இவ்வாறாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 45ஆவது திருத்துதுப்பயணம் குறித்த தனது கருத்துக்களை 7 நிலைகளில் வெளிப்படுத்தியுள்ளார் முனைவர் அந்திரேயா தொர்னியெல்லி.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# கனேஷியன் கான்வெண்ட் அதன் 250வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது

ஜொகூர்: ஏழை எளியோருக்கு பணி செய்யும் தியாக உணர்வோடு துவங்கப் பட்டதுதான் கனேஷியன் கான்வெண்ட் (Canossian Convent) அத்தோடு கல்வி, நோயாளிகள், ஆதரவற்றோர் என சமூக பணிகளை செவ்வனே செய்து வரும் கனேஷியன் கான்வெண்டிற்கு வயது 250. இதை ஏற்படுத்தியவர் புனித மக்டலின் கனோசா என்பவர்.



கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட அருட்சகோதரிகளும் இறைமக்களும்

ஜின்ஞாங் இன்டாஹ் கனேஷியன் கான்வென்ட் கோலாலம்பூர், சுங்கை சிப்புட் தாமான் ஓர்கிட் கனேஷியன் கான்வெண்ட், திருஇருதய ஆண்டவர் மலாக்கா கான்வெண்ட், ஜொகூர் குளுவாங் மரியம் கான்வெண்ட் என மலேசியாவில் அருட்சகோதரிகளால் இயங்கிக் கொண்டிருக்கும் கனோஷியன் கான்வெண்டுகள் இன்று நமது கவனத்தைக் கவர்கின்றன.

250ஆம் ஆண்டு நிறைவு விழா குளுவாங் புனித பிரகாசியார் ஆலயத்தில் மலேசியா தினத்தன்று சிறப்பாக கொண்டாடப் பட்டது. கர்டினல் செபஸ்தியன் பிரான்சிஸ், பேராயர் ஜூலியன் லியாவ் மற்றும் ஐந்து அருட்பணியாளர்கள் காலை பத்து மணிக்கு கூட்டாக திருப்பலி நிறைவேற்றினர்.

ஆலய முன்வரிசையில் கனேஷியன் அருட் சகோதரிகள் முன் இருக்கையில் அமர்ந் திருந்தது நிகழ்வுக்குச் சிறப்பு சேர்த்தது.

தொடர்ச்சி அடுத்துப் பக்கம்

## வின்சென்ட் தெ பவுல் தேசிய பேரவை 'அங்கத்தினரின் ஒற்றுமைக்கும் பணிக்குமான அழைப்பு'

**தைப்பிங்:** கடந்த ஆகஸ்டு 31 முதல் செப்டம்பர் 1, 2024 வரை இங்கு வின்சென்ட் தெ பவுல் அங்கத்தினரின் தேசிய பேரவை நடைபெற்றது. "பெருஞ் சுமை சுமந்து சோர்ந்திருப் பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11:28) எனும் ஆண்டவரின் அழைப்புக்கு ஏற்ப இப்பேரவை தனது அறப்பணிகளை மேற்கொண்டு வரு கிறது.

இப்பேரவையில் பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் சிறப்புரையாற்றி னார். அவர்தம் உரையில் மறைந்த திருத்தந்தை புனித ஜோன் போல் அவர்களின் கூற்றான "கடந்தகாலத்தை நன்றி கொண்டு நினைவில் கொள்ளுங்கள், நிகழ்காலத்தை உற்சாகமாக வாழுங்கள், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர் கொள்ளுங்கள்" என்பதை நினைவுகூர்ந்து அங்கத்தினரை உற்சாகப்படுத்தினார்.

அவர் தொடர்ந்து, நான்கு முக்கிய அம்சங்களைத் தொட்டு அறிவுறுத்தினார்.

1. ஒன்றாகக் கொண்டாடுதல். தூய ஆவியாரால் வழிநடத்தப்படும் இயக்கமாக பணிப் பயணத்தை மேற் கொள்ள அவர் கேட்டுக் கொண்டார்,
2. ஒன்றித்து செவிமடுங்கள். திருஅவைக்குள் முதிர்ச்சியான செவிமடுத்தலின் அவசியத்தை எடுத்துரைத்தார்.
3. பணிக்கு அர்ப்பணித்தல். திருஅவையின் பணி மரபில் கீழ்ப்படிதலின் முக்கியத்தை, மூவொரு கடவுளின் குடும்ப உறவை மையப்படுத்தி விவரித்தார்.
4. ஒன்றித்துப் பயணித்தல். பணி வாழ்வில் தூய ஆவியாருடன் ஒன்றித்து ஆன்மீக செயல்களில் ஈடுபடுவதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, SSVP தலைவர் இராஜேந்திரன் நாராயணன், அவரது வரவேற்பு உரையில் 'வின்சென்டியன்' ஆன்மீகத்தை வலுப்படுத்த தொடர் உருவாக்கப் பயிற்சிகள் இன்றியமையாதவை என்று உரைத்தார்.



SSVP தலைவர் ரஜேந்திரன் நாராயணன், தமது வரவேற்புரையில் வின்சென்சியன் ஆன்மீகத்தை வலிமைப்படுத்துவதற்கும், தாழ்மையும் தியாகமும் போன்ற பண்புகளையும் வளர்க்க formation மற்றும் training தொடர்வது முக்கியம் என்பதை வலியுறுத்தினார். மேலும், ஓசனாம் ஓய்வூதிய கிராமத் (ORV) திட்டத்தை நிறைவு செய்வதற்கான அக்கறையையும் விளக்கி னார்.

அடுத்து பேசிய மார்டின் ஜல்லேவ் SSVP இல் சேவைத்தலைமை மற்றும் குழு கட்டமைப்பின் தத்துவங்களையும் எடுத்துரைத்தார்.

செல்வா மனோகரி, மந்தின்

## ஐரோப்பாவுக்கு வெளியே திருஅவை 'மிகவும் உயிருடன்' உள்ளது (திருத்தந்தை கருத்துரைத்தார்)

தென்கிழக்கு ஆசியாவிற்கான தனது சமீபத்திய திருத்தூதுப் பயணத்தை மீண்டும் நினைவுகூரும்போது, கத்தோலிக்க திருஅவை ஐரோப்பாவிற்கு வெளியே "மிகவும் உயிருடன்" இருப்பதாக திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த புதன் கிழமை கூறினார்.

"இந்தப் பயணத்திற்குப் பிறகு தன்னிச்சையாக வரும் முதல் நினைவு என்னவென்றால், திருஅவையைப் பற்றிய சிந்தனையில் நாம் இன்னும் 'யூரோசென்ட்ரிக்'(Eurocentric) அல்லது அவர்கள் சொல்வது போல், 'மேற்கத்திய திருஅவை' என்ற எண்ணத்தில் உள்ளோம் என்று, புனித பேதுரு சதுக்கத்தில் திருத்தந்தை கூறினார்.

"உண்மையில், திருஅவை மிகவும் பெரியது, உரோமை மற்றும் ஐரோப்பாவை விட மிகப் பெரியது ... ஆனாலும், இந்த தென்கிழக்கு ஆசியா நாடுகளில்தான் அதிக உயிருடன் இருப்பதாகச் சொல்லலாம்," என்று அவர் மேலும் கருத்துரைத்தார்.

தனது திருத்தந்தையின் மிக நீண்ட அனைத்துலப் பயணத்திலிருந்து திரும்பிய பின்னர், தனது முதல் பொதுக் கூட்டத்தில், இந்தோனேஷியா, பப்புவா நியூ கினியா, கிழக்கு திமோர் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தனது அனுபவங்களுக்காக திருத்தந்தை கடவுளுக்கு நன்றி தெரிவித்தார்.

"ஒரு இளம் இயேசு சபை அருள்பணியாளராக நான் செய்ய விரும்பியதை ஒரு வயதான திருத்தந்தை நிறைவேற்ற என்னை அனுமதித்த இறைவனுக்கு நான் நன்றி கூறுகிறேன்" என்று பிரான்சிஸ் கூறினார். இந்தோனேசியாவில், முஸ்லீம்கள் பெரும் பான்மையாக உள்ள நாட்டின் மக்கள் தொகையில் 3% மட்டுமே கத்தோலிக் கராக உள்ளனர் என்றும் அங்கு "நற்செய்திக்கான ஓர் உயிரோட்டமான, ஆற்றல்மிக்க திருஅவையை" சந்தித்ததாகக் கூறினார்.

"இன்றைய மறைத்தூதுப் பணியாளர்கள் மற்றும் சமய போதகர்களுடன் சிறிது காலம் தங்கியிருப்பதில் நான் மகிழ்ச்சியடைந்தேன்; மற்றும் இளைஞர்களின் பாடல்கள் மற்றும் இசையைக் கேட்க நான் தூண்டப்பட்டேன்: அவற்றில், பழங்குடியின வன்முறை இல்லாமல், சார்பு இல்லாமல், பொருளாதார அல்லது கருத்தியல் காலனித்துவம் இல்லாத ஒரு புதிய எதிர்காலத்தைக் கண்டேன்;



சகோதரத்துவத்தின் எதிர்காலம் மற்றும் அற்புதமான இயற்கை சூழலுக்கான எதிர்காலம் அறிந்தேன்," என்று பிரான்சிஸ் கூறினார்.

-தமிழாக்கம் : ஆர்.கே.

**'தெ ஹெரால்டு' வார இதழ் அதன் 30-ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த வாரம் முதல் அனைத்துப் பக்கங்களையும் முழு வண்ணத்தில் வெளியிடுகிறது.**

**வாசித்துப் பயன் பெறுவீர்!**

முதல் பக்கத் தொடர்ச்சி.

கார்டினல் அவர்கள் தமது மறையுரையில் புனித மக்டினலைப் போல தியாகம் அன்பு, சேவை, முன்மாதிரியை அடிப்படையாகக் கொண்டு இயேசுவின் சீடத்துவத்திற்கு சாட்சியாக இருக்க வேண்டும் என கேட்டுகொண்டார்.

மேலும், மலேசியா தினத்தைக் கொண்டாடும் நாம், நாட்டு தலைவர்களுக்கு, நாட்டு மக்களின் ஒற்றுமைக்கு, இந்த ஊரில் நடைபெறும் இடைக்கால தேர்தலுக்காகவும் ஆண்டவரிடத்தில் மன்றாடுவோம் எனக் கேட்டுக் கொண்டார்.



பேராயர் ஜூலியன் அவர்கள், இன்றைய நற்செய்தியில் பேதுரு "நீரே மெசியா" என இயேசுவை அறிந்து சாட்சியம் கூறுகிறார். நாமும் நமது அன்றாட பணிவாழ்வில் இயேசுவை முழுமையாக நம்புவோம் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வோம் எனக் கூறினார்.

மலேசியாவில் இயங்கும் கனேஷியன் கான்வெண்ட் அருட்சகோதரிகள் அனைவரும் பங்குபெற்ற இந்த நன்நாளில் பல இடங்களிலிருந்து வருகை புரிந்த இறைமக்களும் கொண்டாட்டத்தில் பங்கு பெற்று ஆதரவு தந்தனர். ஏறக்குறைய அறுநூறு பேர் ஒன்றுதிரண்டு இக்கொண்டாட்டத்தில் பங்குபெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மலேசியாவில் கல்வி மேம்பாட்டிற்கு இவர்கள் ஆற்றியப் பணி அளப்பரியது என்றால் மிகையாகாது.

அன்று, மத்திய உணவு நேரத்தில் ஆருட்சகோதரிகளின் சேவை குறித்த காணொளி இடம்பெற்றது,.

ஆ.வி.டேவிட்.

## கிறிஸ்துவுக்கு உரியோர் நமக்கும் உரியோர்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 26-ம் ஞாயிறு. முதல் வாசகத்தில் இறைவனின் ஆவி ஒருவருக்கு பொழியப்படுவது கடவுளின் திட்டம். பிறரில் இருக்கும் திறமை, அறிவு , ஞானம் ஆகியவற்றைக் கண்டு நாம் யாரும் பொறாமைப்படக்கூடாது என்று நமக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் யாக்கோபு எளிமையான மக்களின் தேவைகளை முன்வைக்கின்றார். கடந்த மூன்று வார ஞாயிறு வாசகங்களின் தொடர்ச்சியாக இன்றும் ஏழை எளிய மக்களின் தேவைகளை குறிப்பிடுகின்றார். எந்த அளவையால் நாம் அளக்கின்றோமோ அதே அளவை தான் நமக்கும் இறைவன் வைத்திருப்பார் என்பது வலியுறுத்தப்படுகிறது.

இன்றைய நற்செய்தியில் முதல் வாசகத்தைப் போலவே இங்கும் ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இயேசுவின் சீடர் யோவான், இயேசுவின் சீடரைச் சாராதவர் இயேசுவின் பெயரால், அருளடையாளங்கள் செய்கின்றார் என்று வந்து முறையிடுகிறார். இயேசு அதற்கு நமக்கு எதிராக இல்லாதவர் நம் சார்பில் தான் இருக்கிறார். தொடர்ந்து, நம்முடைய உடல் என்னும் கொடையைக் கொண்டு எவ்வாறு நாம் கடவுளை மாட்சிப்படுத்தமுடியும் என்பதையும் இங்கு விளக்குகிறார்.

நம்முடைய உடல் உறுப்புகள் இறைவனை மாட்சிப்படுத்தவும், பிறருக்கு நன்மை செய்யவுமே படைக்கப்பட்டுள்ளன. நம்முடைய சிறு வயதில் இந்தப் பாடலை நாம் பாடியிருப்போம். சின்னஞ்சிறு கண்கள் கடவுளைக்காண, சின்னஞ்சிறு காதுகள் அவர் குரல் கேட்க, கைகள் , அவரைத் தொழ, கால்கள் அவர் ஆலயம் செல்ல .. என்று பாடியது நினைவிருக்கிறதா? ஆனாலும் இன்றைய நவீன உலகினரில் அநேகர் தூய ஆவி குடிகொண்டிருக்கும் உடலாகிய ஆலயத்தை சிற்றின்பத்திற்காகவும் அழிந்து போகும் உலக ஆசைகளுக்காகவும் பயன்படுத்தி உடலை அவமதிக்கின்றனர்.

நம் உடலைக் கொண்டு நாமும் பாவம் செய்யக்கூடாது. பிறரையும் பாவத்தில் விழச்செய்யக்கூடாது. எனவே இன்றைய வாசகங்கள் பலவகையான கருத்துகளை வாரிவழங்குவதைப் பற்றி சிந்திப்போம். . *பிறரின் புகழில் நாம் பொறாமைப் படுவது கூடாது. *எளிய மக்களின் தேவைகள் உடனடியாக நிறைவு செய்யப் படவேண்டும்.

இறைவனின் அனைத்து கட்டளைகளும் நியமங்களும் எப்போதும் நியாயமானவை.* இறைவன் நமக்குத் தந்த உடல் என்னும் அரிய கொடையை மாட்சியுடன் நடத்தவேண்டும்.

இந்த நேரத்தில் நம்மிடையே இருக்கும் மாற்றுத்திறனாளிகளை பரிதாபத்தோடு நோக்காமல், அவர்களின் முயற்சிகளைப் பாராட்டவும், அளவுக்கதிகமான கரிசனை என்றபெயரில் அவர்களுடைய இயலாமையை சுட்டிக்காட்டாமல், மாண்போடு நடத்திடவும் முயற்சிகள் செய்வோம். "ஆண்டவரே, உம்முடைய திருச்சட்டங்கள் நிறைவானது"

-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்

**பொதுக்காலம்-26-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எண் 11:25-29 |
| திரு.பாடல் | 19: 7,9. 11-12. 13 |
| 2-ம் வாசகம் | யாக் 5:1-6 |
| மாற்கு | மாற்கு 9: 38-48 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**